**ஜூலை - 16**

**"ஆவியினால் நிறைந்திருங்கள்." - எபே 5 : 18.**

நாம் நிரப்பப்பட்டிருக்கிற ஆவியின் அளவு, நாம் காலி செய்திருக்கிற சுயசித்ததின் ஆவியின் அளவை ஒத்திருக்கும் நாம் விசுவாசம் கீழ்ப்படிதல் இவைகளின் ஆவியினால் நிரப்பப்பட்டிருக்க வேண்டும். அந்தக் கீழ்ப்படிதல் தன்னையே அன்றாட ஜீவியத்தில் வெளிப்படுத்துவதைப் பார்க்கிலும் வேறு வழியில் கூடாததாக இருந்தாலும், கர்த்தர் தனது பிரதிஷ்டை செய்திருக்கிற ஜனங்களிடத்தில் நோக்கத்தின் கீழ்ப்படிதலை சித்தத்தின் கீழ்ப்படிதலை, இருதயத்தின் கீழ்ப்படிதலை மதிக்கிறார். ஆகையால், கர்த்தருக்கு முற்றிலுமாக விசுவாசமுள்ள இருதயத்தையுடைய சிலர் அவருக்குப் பிரியமாய் இருப்பார்கள். அப்போது அவர்கள் தொடர்பு கொள்கிற சிலருக்கு மிகவும் பிரியமாயிருக்கமாட்டார்கள். "மனுஷருக்குள்ளே மேன்மையாக எண்ணப்படுகின்ற" மற்றவர்கள் தங்களிலுள்ள வெளிப்படையான நல்லொழுக்கங்களின் காரணமாக, இருதயத்தில் சிரத்தையற்றவர்களும், நாணயமில்லாதவர்களுமாய் இருக்கிற காரணத்தால், தேவனுடைய பார்வையில் "அருவருப்பாய்" இருப்பார்கள். ஆகிலும், தன்னில் புது நம்பிக்கையையும், புது ஆவியையும் உடையவன் தன்னுடைய எண்ணங்களில் மாத்திரமல்லாமல், தன்னுடைய வார்த்தைகளிலும் கிரியைகளிலும் உள்ளான வெளிப்படையான தன்னுடைய எல்லாக் காரியங்களிலும் தன்னையே சுத்திகரிக்க நாடுவான். **- Z ’99, 92 (R 2455)**

ஆவியினால் நிறைந்திருப்பதின் அர்த்தம், கிறிஸ்துவின் சீஷர்களாக பிரதம குணசீலங்கள் ஒன்றோடொன்று இணக்கமாக சரிப்படுத்தப்பட்ட நிலையில் அவர்களில் ஆதிக்கம் செலுத்துவதே. இப்படிப்பட்ட ஆவியின் நிரப்புதலை பெற்றிருப்பது, தேவனின் ஆவி, வார்த்தை, பராமரிப்பு இவைகளை உண்மையாய் உபயோகிப்பதைக் குறிக்கிறது. இப்படித் தொடர்ந்து நிறைந்து இருப்பதின் பலனாக கிறிஸ்துவினுடையதைப் போலொத்த குணம் ஒருவரில் உருவாகிறது மாத்திரமல்லாமல், கிறிஸ்துவோடு இராஜ்ஜியத்தில் பங்கு கொள்ளத் தகுதியுமாக்குகிறது. இவ்விதமான ஆவியினால் நிரப்பப்பட்டிருத்தல், இப்பொழுது இருக்கிற ஜீவியத்திற்கும், இனி வருகிற ஜீவியத்திற்குமுள்ள வாக்குத்தத்ததை உடையதாயிருக்கிறது. **- P ’36, 94.**

**ஒத்து வாக்கியங்கள் :-**

**மாற் 13:11; லூக் 11:13; யோவா 3:34; 7:38,39; 14:16,17,26; அப் 4:8,31;5:32; 6:5; 9:31; 11:24; 13:52; ரோம 5:3-5; 8:1-16; 1கொரி 2:4,10-14; 3:16; 2கொரி 3:3,6,17,18; கலா 5:16,17,22,25.**

**கோபுர வாசிப்பு : Z ’16, 182 (R 5912)**

**வினாக்கள் : இந்த வாரத்தில் நான் ஆவியினால் நிரப்பப்பட்டேனா? அது எவ்வாறு நடந்தேறியது? எது உதவியாக அல்லது இடையூறாக இருந்தது? பலாபலன் என்ன?**